16th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இம்மாநில அபிவிருத்தி வேலைகளில் திட்ட வேலைகளும் இருக்கின்றன; திட்டத்தின் கீழ் வாராத வேலைகளும் இருக்கின்றன. திட்ட வேலைகளைப் பொறுத்தவரையில், இம்மாநிலம் முழுவதற்குமாக 1963-64-ம் ஆண்டுக்கு 59.83 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான புள்ளிவிவரங்கள் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

The developmental works in the State include both plan and non-plan schemes. So far as plan schemes are concerned, a provision of Rs. 59.83 crores has been budgeted for the year 1963–64 for the State as a whole. The District-wise break-up of figures has not been complied so far.

திரு. சோ. ஆறுமுகம்: மாவட்ட ரீதியாக அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்படுகிற பணம் பொருளாதார அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா? அப்படியானால் சேலம் மாவட்டத்தைப் பின் தங்கிய மாவட்டமாகக் கருதி, அதிகப்படியான தொகையை ஒதுக்குவதற்குச் சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பின் தங்கிய மாவட்டங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்தில் தொடர்ந்து இருக்கிறது என்றாலும், இதை மாவட்ட வாரியாகப் பிரித்துப் பகிர்ந்து கொடுப்பதற்கில்லை.

Pudukkottai Municipality

* 169 *Q.*—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Pudukkottai municipality in Tiruchirappalli district is qualified to be up-graded as class I municipality; and

(*b*) if so, when a final decision would be taken?

The Hon. Sri S. M. A. MAJID: The proposal for reclassifying certain municipalities including Pudukkottai is under the consideration of the Government.

புதுக்கோட்டை நகராட்சி உட்பட சில நகராட்சிகளின் தரம் மாற்றுதல் பிரேரணை சர்க்காரின் கவனத்தில் இருந்து வருகிறது.

குழந்தை உணவுத் தொழிற்சாலை (உதகை)

* 170 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குழந்தை உணவு தொழிற்சாலை உதகமண்டலத்தில் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இந்தத் திட்டத்தை உதகை மாவட்டத்திலே வைக்க வேண்டுமென்று கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் இது

[16th August 1963

பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எந்தவிதமான பரிசீலனையில் இருக்கிறது, எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உதகையில் போதுமான வசதியில்லை. அந்த வசதியை எப்படிப் பெருக்குவது என்பது தான் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. வசதி என்று சொன்னால், போதிய அளவுக்குப் பால் கிடைக்க வேண்டும். கோடை காலத்தில் அங்கே வருகின்றவர்களுக்குக் கூட போதிய அளவுக்கு பால் கிடைப்பதில்லை. அந்த இடத்திலே பால் வசதியைப் பெருக்கி, இந்த பேபி ஃபூட் பாக்டரியை வைக்க முடியுமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : பால் வசதிக்குக் கூடலூர் பகுதியில் உள்ள மசனக்குடியில் மாடுகளை வளர்ப்பதற்கு வசதியாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அங்கு பாக்டரி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பால் வசதியை அதிகரிப்பதற்கு மாடுகளை வளர்த்து, இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அரசாங்காம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலிலே மாடுகளை வளர்க்க வேண்டும். அதற்குப் பிறகு பால் அதிகமாகக் கிடைக்க வேண்டும். அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எந்த இடத்திலே பால் கிடைக்கிறதோ, அந்த இடத்திலே வைத்தால் சீக்கிரம் பாக்டரி வராதா என்று பார்க்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தற்போது உதகையில் தினம் ஆயிரம் லிட்டர் பால் அங்கே விற்பனை ஆகாமல் சென்னைக்குக் கொண்டு வரப் படுகிறது. அந்த அளவுக்குப் பால் இருந்தால், இந்த திட்டத்தை அங்கே வைக்க முன்வருவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் முன்பே பதில் சொன்னேன், கோடை காலத்திலே அங்கே இருக்கிறவர்களுக்குக் கூடப் பால் கிடைக்கவில்லை. ஒரு பாக்டரி வைத்தால் ஆண்டு பூராவும் பால் கிடைத்தால்தான், அது வேலை செய்ய முடியும். இல்லாவிட்டால், எட்டு மாதங்களுக்குப் பால் கிடைத்து, நான்கு மாதங்களுக்கு மூடும்படியான நிலைமை இருந்தால், அது சரியாக வராது. இதை எல்லாம் பரிசீலனை செய்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : இப்பொழுது பால் அதிகமாகக் கிடைக்கவில்லை, கோடைக்காலத்தில் கிடைக்கவில்லை என்ற சாக்கை வைத்துக் கொண்டு, நீலகிரியிலிருந்து வேறு இடத்திற்கு இந்த பாக்டரியை மாற்றுவதாக யோசனை இருந்தால், அதை அரசாங்கம் கைவிட்டு விடுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வசதி இருக்கும் இடத்தில் தான் பாக்டரி வைக்க முடியும். கனம் அங்கத்தினர் கோபித்துக் கொள்ளுகிறார்கள் என்பதற்காகத் தொழிற்சாலை வைக்க முடியுமா ?